18th March 1966]

திரு. ஜே. மாதா கவுடர்: சார், இந்த நிதி வசூலிப்பதில் எந்தெந்த நடிகர்கள் முக்கியமாக முயற்சி எடுத்துக்கொண்டார்கள் என்று சொல்ல முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்த விவரங்களெல்லாம் என்னிடம் இல்லை.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, யுத்த நிதி திரட்டச் சென்றபோது ஆங்காங்கே உள்ள அதிகாரிகள் கட்டாயமாக டிக்கெட்டுகளை விற்ருர்கள் என்று அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இது யுத்த நிதிக்காக அல்ல—ஜவான்களுடைய குடும்பங்களுக்கு வசதி தேடுவதற்காக, ஜவான்களுக்கு வசதி தேடுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டது. அதிகாரிகள் கட்டாயப்படுத்திப் பணம் வசூலித்தார்கள் என்று சொல்லும் குற்றச்சாட்டை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. அவ்வாறு ஒன்றும் கட்டாயப்படுத்தப்படவில்லை. மக்கள் ஜவான்களுடைய குடும்பங்களுக்கு உதவி அளிக்கவேண்டும் என்று ஆர்வத்துன்ட உற்சாகத்துடன் இருந்தார்கள். அதோடு சிறந்த நடிகர்கள் நாடகம் நடிக்கிருர்கள் என்ருல் அதைப் பார்க்கவேண்டுமென்றும். ஆசை. அப்படி இரண்டும் சேர்ந்து, மக்கள் தாராளமாக உதவி அளித்தார்கள்.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : தலைவர் அவர்களே, சினிமா நடிகர்கள் தாங்களாகவே முன் வந்து நிதி வசூலிக்க முற்பட்டார்களா ? அல்லது அரசாங்கம் கேட்டுக்கொண்டு அதன் பேரில் முன் வந்தார்களா ? அப்படியானுல் எல்லா நடிகர்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசாங்கமாக ஒன்றும் செய்யவில்லை.

*340 கேள்வி—திரு. ஜே. மாதா கவுடர் :
திரு. செ. மாதவன் :
திரு. கரு. சீமைச்சாமி : } கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இதுவரையில் யுத்த நிதிக்கு எவ்வளவு நிதி கிடைத்திருக்கிறது ?

(இ) இதில் ஜவான்களின் குடும்பங்களுக்கு என்னென்ன சவுகரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) The total collections made in the Madras State towards the National Defence Fund up to 28th February 1966 are Rs. 4,37,49,963. Besides this, a sum of Rs. 29,50,349 was also collected towards the Madras State Jawans' Relief Fund up to 28th February 1966.

(*b*) No amount is spent out of the National Defence Fund for the welfare of Jawans' families as the entire collections are periodically remitted to the Central Account of the National Defence Fund at New Delhi.

However, cash relief is afforded to the families of Jawans found missing, willed or wounded in enemy action subject to a maximum of Rs. 500 in each case.

திரு. ஜே. மாதா கவுடர் : சார், இந்தத் தொகையில் மாவட்ட வாரியாக எவ்வளவு வசூலிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்ல முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்த விவரம் இப்போது என்னிடம் இல்லை.

Welfare of families of Defence personnel

*341 *Q*.—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state the extent of benefits, nature of concessions and other privileges proposed to be given to families of defence service officers and personnel hailing from this State who have been killed in action or incapacitated as a result of injuries sustained in action?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A statement [a] is placed on the Table of the House.

திரு. வை. சங்கரன் : சார், இது போன்ற கேஸ்களுக்கு நிலம் வழங்குவது, குழந்தைகளுக்கு கல்வி வசதி அளிப்பது ஆகிய வற்றுக்கு 'லம்ப்சம் கிராண்ட் அப்டு 500' என்று கொடுக்கப் பட்டிருக்கிறது. வயோதிகப் பெற்றோர்கள், சிறு குழந்தைகள் இருக்கும்போது இறந்துவிட்டால் அவர்களுக்குக் குடும்பப் பென்ஷனுகப் போதிய தொகை கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : குறிப்பிட்ட சந்தர்ப்பங்கள், குறிப்பிட்ட கஷ்டங்கள் அந்த ஜவான்கள் குடும்பங்களுக்கு ஏற் பட்டால் அப்போது பிரத்தியோகமாகக் கவனம் செலுத்தப்படும்.

***342 கேள்வி.—திரு. பி. கே. மூக்கையா தேவர் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

மதுரை மாவட்டத்தில், 2, 3, மாதங்களாக ஜவான்களின் குடும்பத்திற்கு, ஜவான்களின் சம்பளத்தில் ஒரு பகுதி வந்து கொண்டிருந்தது நின்றுவிட்டது என்ற புகார் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir. The Government, however, had the matter enquired into. It has been reported to them that the Secretary, District Soldiers', Sailors' and Airmens' Board, Madurai, had received 31 representations from

---

[a] Printed as Appendix on pages 105–111.